DINAMANI

PAGE NO: 02 DATE: 04.10.2023

# புதுவை மத்திய பல்கலை.யில் காலநிலை மாற்றத்துக்கான மையம் தொடக்கம்

**புதுச்சேரி, அக். 3:** புதுவை மத்திய பல்கலைக்கழகத்தில் நிலைத்தன்மை மற்றும் காலநிலை மாற்றத்துக்கான மையம் தொடங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு, துணைவேந்தர் குர்மீத் சிங் தலைமை வகித்தார். பல்கலைக்கழக சர்வதேச உறவுகள் துறைத் தலைவர் அ.சுப்பிரமணியம் ராஜு மையத்தை தொடங்கி வைத்தார்.

பல்கலைக்கழக கல்விப் புதுமைகள் மற்றும் கிராமப்புற மறுசீரமைப்பு இயக்குநர் (பொ) ஒருங்கிணைப்பாளர் ஓ. தரணிக்கரசு சிறப்புரையாற்றினார். மையத்தின் நோக்கம் குறித்து அதன் தலைவர் மற்றும் ஒருங்கிணைப்பாளர் மதிமரன் நடராஜன் விளக்கினார்.

பல்கலைக்கழகப் பதிவாளர் (பொறுப்பு) ரஜனிஷ் பூடானி, சுற்றுச்சூழல் அறிவியல் துறைத் தலைவர் ஈ. ராமமூர்த்தி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

பெங்களூரில் உள்ள சுவிட்சர்லாந்து தூதரக தலைமை நிர்வாக அலுவலர் மற்றும் தூதரக ஆலோசகர் ஜோனாஸ் புருன்ச்விக் கௌரவ விருந்தினராகக் கலந்து கொண்டார்.

இணைப் பேராசிரியர் நந்த கிஷோர் நன்றி கூறினார்.

தேசியக் கல்விக் கொள்கைக்கு ஏற்ப இந்த மையம் புதுச்சேரி மத்தியப் பல்கலைக்கழகத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ளதாகப் பேராசிரியர்கள் தெரிவித்தனர்.